# தமிழ்நாடு வானவில் கூட்டணி

# Tamil Nadu Rainbow Coalition

| | |
|---|---|
| **CHENNAI's 12th RAINBOW PRIDE, JUNE 2020**<br><br>CONTACTS:<br>tamilnadurainbowcoalition@gmail.com | **சென்னையின் 12- வது வானவில் சுயமரியாதை பேரணி, ஜூன் 2020**<br><br>தொடர்புக்கு:<br>tamilnadurainbowcoalition@gmail.com |
| Since 2009, Chennai's Rainbow Pride series has taken place in June. The pride walk and other events during Pride month have celebrated the visibility of alternative sexualities, gender identities, and sex characteristics, and affirm the notion of self-respect as a key goal of the lesbian, gay, bi, transgender, intersex, queer, asexual and other (LGBTIQA+) movements. | கடந்த 2009 – ஆம் ஆண்டிலிருந்து ஜூன் மாதம் தோறும் சென்னையின் வானவில் சுயமரியாதை பேரணி நடைபெற்று வருகிறது. மாற்று பாலீர்ப்பு, பாலின அடையாளம் மற்றும் பால் பண்புகளின் வெளிப்பாட்டை கொண்டாடும் விதமாகவும், தங்கள் கோரிக்கைகளை அரசுக்கும், சமூகத்திற்க்கும் தெரிவிக்கும் விதமாக இருபாலுடலாளர்கள், மாற்று பாலினம் மற்றும் பாலீர்ப்பு கொண்ட மக்களுக்காக செயல்பட்டுவரும் இயக்கங்கள் சுயமரியாதை எனும் முக்கிய குறிக்கோளை மையமாக கொண்டுள்ளன.அதை உறுதிசெய்யும் விதமாக வானவில் பேரணி நடத்துவதுடன் மாதம் முழுவதும் பல்வகை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. |
| This year, because of the lockdown and the community's responsibility to contain spread of the disease, all Pride-associated activities on the ground, including the Pride walk, stand cancelled. A few online events will be announced by groups and collectives that are part of the Tamil Nadu Rainbow Coalition. | இந்த ஆண்டு ஊரடங்கு உத்தரவின் காரணமாகமாகவும், சமூகபொறுப்புணர்வின் காரணமாகவும் வானவில் சுயமரியாதை பேரணி மற்றும் அதனோடு தொடர்புடைய நிகழ்வுகள் அனைத்தும் விலக்கப்படுகின்றன. தமிழ்நாடு வானவில் கூட்டமைப்பிலுள்ள குழுக்கள் மற்றும் அமைப்புகள் நடத்த உள்ள இணையதளம் |

| | |
|---|---|
| These will include online cultural performances, sensitization sessions on sexuality and gender identity, a mental health workshop, solidarity events, films, plays, and other literary programmes. These events will be held in accordance to the prescribed governmental regulations on physical distancing. | வாயிலான நிகழ்வுகள்  குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும். இதில் இணையம் வாயிலான கலைநிகழ்ச்சிகள், பாலியல் மற்றும் பாலின அடையாளம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள், மனநலம் சார்ந்த பயிற்சிப்பட்டறை, தோழமைநிகழ்வுகள், திரைப்படங்கள், நாடகங்கள் மற்றும் பிற கலை, இலக்கிய நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. இந்த நிகழ்வுகள் அனைத்தும் அரசு அறிவுறுத்தலின் படி கடைபிடிக்க வேண்டிய தனிநபர் இடைவெளியோடு நடத்தப்படவுள்ளன |
| The Chennai Rainbow (Self-Respect) march will NOT be held on Sunday, June 28, 2020, due to the current global pandemic and to prevent the spread of the highly contagious SARS-Cov2 infection. This decision has been taken in compliance with the lockdown imposed by the central and state governments to prevent transmission. We encourage everyone to take the necessary precautions and to stay safe, and request that no one should gather at the usual start-point of the pride march. We request everyone to co-operate withthe current infection-prevention work being carried out. | சர்வதேச நிலையை கருத்தில் கொண்டும் கொரானா பரவலை கட்டுப்படுத்தும் விதமாகவும் ஜூன் 28 2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை வானவில் சுயமரியாதை பேரணியானது நடத்தப்படமாட்டாது. அரசு அறிவித்த ஊரடங்கு காரணமாகவும், நோய் தொற்றுதலை முற்றிலும் நீக்கவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அனைவரும் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பாக இருக்கும்படியும், வழக்கமாக பேரணி தொடங்கும் இடத்தில் கூடி நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். |
| | |
| Members of the TNRC place the following observations and demands on record for this Pride month: | வானவில் பேரணி மாதத்தை முன்னிட்டு தமிழ்நாடு வானவில் கூட்டமைப்பின் உறுப்பினர்கள்பின்வரும் கோரிக்கைகள்மற்றும் கருத்துக்களை முன்வைக்கிறோம்: |
| 1) The global pandemic has immensely affected trans* people (including transgender men and transgender women), who are already a marginalized population in our society. Hence, we request the government to extend financial and health-related assistance to trans* people till the situation changes. We acknowledge the financial assistance already provided to transgender women (transwomen) in view of the loss of livelihood during the Corona pandemic. We request the same to be extended to transgender men (transmen) as well. | 1) ஏற்கனவே சமுதாயத்தால் ஒதுக்கப்ப்டுள்ள திருநர் சமுதாயம் (திருநங்கைகள் மற்றும் திருநம்பிகள்) கொரோனோவினால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக மிகவும் பாதிக்கப்படுள்ளனர். இதானல் அரசும் இந்நிலை தொடரும் வரை  பொருளாதார உதவிகள் மற்றும்ஆரோக்கியம் சார்ந்த உதவிகளை தொடர்ந்து செய்ய கோருகின்றோம். திருநங்கைகளுக்கு அரசு கொரோனோ கால நிதி உதவி செய்ததை நினைவு கூர்ந்து திருநம்பிகளுக்கும் அதே போலநிதி உதவிகளும் அரசுஉதவிகளும் கிடைக்க வழிவகை செய்திட வேண்டுகிறோம். |
| 2) This lockdown which has affected the lives of civilians across the country, has heavily | 2) இந்த ஊரடங்கு உத்தரவின் காரணமாக பல்வேறு பொதுமக்கள் வாழ்வாதாரம் |

| | |
|---|---|
| marginalized the already-marginalised sections of our society. Therefore, the government should work towards removing the lockdown as soon as possible with all public health safeguards in place. | பாதிக்கப்ப்ட்ட இந்த வேளையில் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட எங்களுக்கு மேலும் ஒதுக்குதலை ஏற்ப்படுத்தியுள்ளது. எனவே அரசாங்கம் அனைத்து பொது சுகாதார பாதுகாப்புகளை செயல்படுத்தி இந்த ஊரடங்கை விரைவில் நீக்க வழிவகை செய்திட வேண்டும். |
| 3) We ask that the Central and State governments implement the Supreme Court's directives in *National Legal Services Authority (NALSA) v. Union on India* in its entirety, and urge the states to roll out schemes in a manner that is inclusive of both transgender men and transgender women. We oppose the Transgender Persons (Protection of Rights) Act 2019 and accompanying Rules as many sections of the Act are contrary to the Supreme Court's decision in *NALSA v. Union of India*. We ask for implementation of the NALSA verdict, and an Act that recognizes the right to self-identification and does not criminalize begging. The Act must provide for reservation and affirmative action in education and employment in public and private sectors. We also urge for reforms in the unorganized sector which is inclusive of LGBTQIA+ persons. This will go a long way in the prevention of dehumanization, infantilization, and minimization of trans rights and thereby eradication of easy pathways towards the structural strong-armed oppression of transgender persons. | 3) நால்சா(NALSA) தீர்ப்பில் உச்சநீதி  மன்றம் குறிப்பிட்டுள்ள அனைத்து வழிகாட்டுதல்களையும் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும் எனவும் திருநங்கை மற்றும் திருநம்பிகளை உள்ளடக்கிய நலத்திட்டங்களை மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். உச்சநீதிமன்றத்தின் நால்சா தீர்ப்புக்கு முரணாக அமைந்துள்ள திருநர்உரிமைகள் பாதுகாப்புச்சட்டம் 2019 மற்றும் அதனோடு தொடர்புடைய விதிகளுக்கு (வழிமுறை கையேடு) எங்கள் எதிர்ப்பை தெரிவித்துக்கொள்கிறோம். எங்களுக்கான இட ஒதுக்கீட்டைஅமல்படுத்துவதோடு, எங்கள் பாலின அடையாளம்,  எங்கள் சுய அடையாளமாகும் அது எங்கள்உரிமை, பிச்சை எடுப்பதை குற்றமல்ல என்பதோடு மற்றும் அரசு,தனியார் துறைகளில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் ஒரு சட்டத்தை கொண்டுவர வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். மேலும், மாற்றுப்பாலினம் மற்றும் பாலீர்ப்பு கொண்ட மக்களை உள்ளடக்கியவகையில் அமைப்புசாரா துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்.  இந்த வழிமுறைகளை செயல்படுத்துவதன்மூலம் பொதுசமூகம் திருநர்மக்களைமனிதநேயமற்ற, அறிவுசார் முதிர்ச்சிபெறாத மனிதர்களாக கருதுவதை மாற்றுவது மட்டுமல்லாமல், திருநருக்கான உரிமைகளை குன்றாது பாதுகாத்துக்கொள்ள மிகவும் உறுதுணையாக இருக்கும். மேலும், திருநர்மக்களை அடக்கு முறைக்கு உட்படுத்துவதை ஒழிப்தற்க்கு இலகுவாக இருக்கும். |
| 4) We ask that the Third Gender Welfare Board in Tamil Nadu comply with all aspects of the NALSA verdict, and include transgender men with immediate effect. We draw the government's attention to difficulties being | 4) நால்சா(NALSA) தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை ஒத்திசைந்து நடக்கவேண்டும் எனவும் திருநம்பிகளை நலவாரியத்தில் உடனடியாக இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் தமிழ்நாடு மூன்றாம் பாலினத்தவர் |

| | |
|---|---|
| faced by transgender persons, particularly transgender men, in changing their name and gender through Gazette notification in Tamil Nadu. They are being asked to produce either proof of surgery (which is contrary to the NALSA verdict) or an identity document from the Third Gender Welfare board (which does not include transgender men). Individuals seeking a change of name and gender on education certificates are also being asked for medical certificates. These practices need to stop as they are contrary to the right to self-determination. | நலவாரியத்திற்கு கோரிக்கை விடுக்கிறோம். தமிழகத்தில் திருநர்மக்கள், குறிப்பாக திருநம்பிகள், அரசு ஆவணங்களில் தங்கள் பெயர் மாற்றம் மற்றும் பாலின மாற்றம் ஆகியவற்றிற்க்கு எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் எனகேட்டுக் கொள்கிறோம். பால் மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டதற்கான சான்றிதழ் கேட்பது (இப்படி கேட்பது நால்சாதீர்ப்புக்குஎதிரானது) அல்லது மூன்றாம் பாலினத்தவர் நலவாரியத்தின் அடையாள ஆவணத்தை (அட்டை) (மூன்றாம் பாலினத்தவர் நலவாரியம் திருநம்பிகளை இன்னும் இணைத்துக்கொள்ளாத இந்நிலையில்) சமர்ப்பிக்கும்படி அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இதேபோல் கல்விச்சான்றிதழ்களில் பெயர் மற்றும் பாலினம் திருத்தம் மேற்கொள்பவர்களிடம் மருத்துவ சான்றிதழ் கேட்கப்படுகிறது. அவ்வாறு கேட்பது சுயநிர்ணய உரிமைக்கு எதிராகஉள்ளது. இது போன்ற நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப் படவேண்டும். |
| 5) We thank the Government of Tamil Nadu and the National Health Mission of the state for working to establish transgender clinics in Madurai and Chennai and hope that these clinics will be inclusive of all segments of the transgender community. We seek access to stigma-free and quality care including mental health services, suicide hotlines, and shelters for survivors of family violence, for all LGBTIQA+ communities in the state. We would also like for these institutions to enhance their public health outreach programmes to be accessible to the most vulnerable, and/or fringe groups in the community. While we appreciate and welcome the creation of separate hospitals for trans* people, we also request the government to continue offering the high-quality treatments that were available for trans* people in regular hospitals.<br>Sexual Reassignment Surgery (SRS) for trans* people only requires the patient to have attained 18 years of age, i.e. the legal age of maturity. The consent of the parents is not required because the decision concerning SRS is a question of personal right. Therefore, | 5) சென்னை மற்றும் மதுரையில் திருநர்மக்களுக்கான சுகாதார நிலையங்களை ஆரம்பிப்பதற்கான பணிகளை மேற்கொண்டுள்ள தமிழக அரசு மற்றும் தேசியசுகாதாரபணி , தமிழ்நாடு ஆகியோருக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆரம்பசுகாதாரநிலையங்கள் திருநர்சமூகத்தின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இருக்கும் என நம்புகிறோம். தமிழகத்தில் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சமூகமக்களுக்கான ஆதரவு இல்லங்கள் தற்கொலை தடுப்பு உதவிஎண்கள் மற்றும் மனநலசேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கரைபடுத்துதல் இல்லாத உயர்தரமான சேவைகளை அளிக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். மேலும், இது போன்ற அமைப்புகள் தங்களது பொது சுகாதாரவிழிப்புணர்வு நிகழ்வுகளை மாற்றுப்பாலினம் மற்றும் பாலீர்ப்பு சமூகத்திலுள்ள, எளிதில் பாதிப்படையக்கூடிய மற்றும் விளிம்புநிலை குழுக்களில் உள்ள மக்கள் தங்கள் எளிதில் அணுகும்படி அமைக்கவேண்டும் என வலியுறுத்துகிறோம்.<br>திருநர்களுக்கான சிறப்பான தனி மருத்துவமனைகள் அமையப்பெற்றது |

| | |
|---|---|
| hospitals should not insist that the patient bring their parent(s) along with them. | மிகசிறப்பானது அதே வேளையில் ஏற்கனவே இந்த சிகிச்சைகள் நடைபெற்றுவந்த மருத்துவமனைகளில் அது தொடர்ந்து மிகசிறப்பான முறையில் இயங்க ஆவண செய்ய கோருகின்றோம். திருநர்கள் பால்மாற்று அறுவை சிகிச்சை செய்ய 18 வயது நிறைவு செய்திருந்தால் போதுமானது. பெற்றோர் சம்மதம் தேவையில்லை இது தனிநபர் உரிமையை சார்ந்ததாகும். எனவே மருத்துவமனைகளில் பெற்றோரை அழைத்துவர கட்டாயப்படுத்தகூடாது. |
| 6) We applaud the Government of Tamil Nadu for developing a State Mental Health Policy that is inclusive of the LGBTQIA+ community. We particularly appreciate the statement against conversion therapy practices that attempt to change homosexual and bisexual persons into heterosexual and transgender persons into cisgender persons. Such efforts are unethical, unscientific and in gross violation of Sections 3 and 106 of the Mental Health Care Act, 2017. We ask that the State Mental Health Authority take necessary action against mental health professionals and institutions who continue to practice conversation therapy. We also request mental health practitioners who publish their videos/writings on the internet to help members of the LGBTQIA+ community to be abreast of scientific perspectives and consider the State Mental Health Policy. | 6) மாற்று பாலின, பாலீர்ப்பு மக்களை உள்ளடக்கிய மாநில மனநல கொள்கையை உருவாக்கிய தமிழக அரசிற்க்கு எங்களது பாராட்டுகளை தெரிவித்துகொள்கிறோம். அதிலும் குறிப்பாக ஓர்பால்,இருபால் ஈர்ப்பாளர்கள் ஆகியோரை  சிகிச்சையின் மூலம் எதிர்பால் ஈர்ப்பளரகளாக மாற்ற முயற்ச்சிக்கும் தவறான மற்றும் அறிவியலுக்கு புறம்பான சிகிச்சையையும் மாற்று பாலினத்தவர்களை பிறப்பு பாலினத்தவர்களாக மாற்ற முயற்ச்சிக்கும் சிகிச்சைகளும் மனநலம் காக்கும் சட்டம் 2017 , பிரிவு 3 மற்றும் 106 ஆகியவற்றிற்க்கு எதிரானதாகும். எனவே தமிழக அரசாங்கம் அம்மாதிரி குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனம் மற்றும் மருத்துவர்கள், ஆகியோர் மீது தக்க தீவிர நடவடிக்கை எடுக்குமாறு மாநில மனநல காப்பக அதிகார அமைப்பை கேட்டுகொள்கின்றோம்.<br>மனநலம்சார்ந்த தொழில் வல்லுனர்கள் தங்கள் வெளியிடும் காணொளிகளை / பதிவுகளை அறிவியல் கண்ணோட்டத்துடனும், மருத்துவ வழிகாடுதல்கள்படியும் சிந்தித்து வெளியிடுமாறு கேட்டுகொள்கிறோம். |
| 7)  We celebrate the Supreme Court's landmark verdict of Sept 6, 2018, in *Navtej Johar v. Union of India*, that decriminalized consensual relationships among LGBTQIA+ adults. The court has read down section 377 of the Indian Penal Code and has affirmed the fundamental rights of LGBTQIA+ persons under the Constitution of India. We ask that the Government immediately implement the Supreme Court's directions to disseminate the key points of the judgment to all stakeholders across the country, especially government departments, police, doctors, and educators, | 7) கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதி நவ்தேஜ் ஜோகர் வழக்கில், வயது வந்த மாற்றுப் பாலினம் மற்றும்பாலீர்ப்புகொண்டமக்களிடையேபரஸ்பர சம்மதத்துடன்நடைபெறும்உறவுகுற்றமில்லைஎ னஉச்சநீதிமன்றம்வழங்கியதீர்ப்புமிகவும்மகிழ்ச் சிகரமானதாக உள்ளது. சட்டப்பிரிவு 377 நீக்கியதுடன் அரசமைப்பு சட்டத்தின் கீழ் மாற்றுப்பாலினம் மற்றும் பாலீர்ப்பு கொண்ட மக்களுக்கான அடிப்படை உரிமைகளை உச்சநீதிமன்றம் உறுதிசெய்துள்ளது. இந்த தீர்ப்பில் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ள |

| | |
|---|---|
| and urge them to follow the text and spirit of the judgment. We also ask school and higher education boards across the country to include gender education, as well as SOGIESC (Sexual orientation, gender identity and expression, secondary characterstics) training for students and educators alike. | வழிகாட்டுதல்களை நாடு முழுவதும் மத்தியஅரசு உடனடியாக செயல்படுத்தவேண்டும் எனவும் குறிப்பாக அரசுத்துறைகள், காவல்துறையினர், மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உச்சநீதிமன்ற தீர்ப்பை பின்பற்றி நடக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம். நாடு முழுவதும் பாலினம் குறித்த கல்வியை செயல்படுத்தவேண்டும் எனவும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு SOGIESC (Sexual orientation, gender identity and expression, secondary characteristics) பயிற்சி அளிக்கவேண்டும் எனவும் பள்ளி மற்றும் உயர்கல்வித்துறைக்கு கோரிக்கைவிடுக்கிறோம். |
| 8) We have noted several instances of police in Tamil Nadu trying to convince adult women in same-gender relationships to break up their relationships and go back to their natal families, where they are vulnerable to forced marriage, house arrest, dishonour killings, and/or sexual assault. We demand that the police recognize the rights of adults to live with whoever they wish to, a right that has been affirmed by the Supreme Court in *Shafin Jahan v. Asokan K.M.*, followed in *Navtej Johar v. Union of India* and recognized in other verdicts by the Kerala, Calcutta, and Delhi High Courts in recent months.<br>We also seek police support to combat the post-377 rise in blackmail and extortion targeting gay and bisexual men. | 8) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட தன்பாலின உறவில் இருக்கும் இரண்டு பெண்களை அவர்களின் உறவை முறித்து பெற்றோருடன் அனுப்பி வைக்கும் முயற்சிகளில் தமிழக காவல்துறை ஈடுபட்டுவருவது குறித்து எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. இதுபோன்ற தொடர்ந்து நடந்து  வரும் நடவடிக்கைகளால் பெண்கள் கட்டாயத் திருமணம், வீட்டுச்சிறை, ஆணவகொலை மற்றும் பாலியல் வன்கொடுமை போன்ற அபாய சூழல்களில் சிக்கிக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது. ஷாபின்ஜஹான் v அசோகன்கே. எம் வழக்கு, நவ்தேஜ்ஜோகர் வழக்கு ஆகியவற்றில் உச்சநீதிமன்றம் உறுதிசெய்த மற்றும் கேரளா, கொல்கத்தா, டெல்லி உயர்நீதிமன்றங்களில் சமீபத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் தான் யாருடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதை முடிவுசெய்யும் உரிமை அந்தந்த தனிநபர்களக்கானது. இதை காவல் துறையினர் நினைவில் கொள்ளவேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்.<br>சட்டப்பிரிவு 377 நீக்கத்திற்கு பின்னர் தன்பால் ஈர்ப்பு மற்றும் இருபால்ஈர்ப்பு கொண்ட ஆண்களை மிரட்டி பணம் மற்றும் உடைமைகளை பறித்துக்கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துவருவதை தடுக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு காவல்துறையினர் ஆதரவு அளிக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம். |
| 9) We ask that the government bring about a law that specifically protects people of alternative genders and sexualities against marginalization and stigmatisation. This law should comprehensively include issues concerning health, legal rights and education, | 9) மாறிய பாலின மற்றும் மாற்று பாலீர்ப்பு கொண்ட மக்களை ஒதுக்குதலிருந்தும் , கறைப்படுத்ததிலிருந்தும் பாதுகாக்க தேவையான குறிப்பிடும்படியான சட்டம் கொண்டு வர கோருகின்றோம். அதை ஆரோக்கியம், சட்டம், கல்விஆகிய துறைகள் |

| | |
|---|---|
| and be enforced in society and in both the public and private sectors. | சம்பந்தபட்ட விசியங்களை உள்ளடக்கியவிரிவான ஒரு சட்டமாகவும் அதை சமூகம், அரசு மற்றும் தனியார் துறை ஆகிய பரந்த வகையில் செயல் படுத்தவும் கோருகின்றோம். |
| 10) We welcome the decision of the Madurai bench of the High Court of Madras on April 22, 2019 in *Arunkumar v. The Inspector General of Registration* where the court has recognized and upheld a marriage between a trans woman and a cis man. We also welcome the court's directions against forceful medical intervention on children with intersex variations. | 10) கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் தேதி அருண்குமார் என்பவரது வழக்கில் திருநங்கை மற்றும் அவரது ஆண் துணைவருக்கு இடையே நடைபெற்ற திருமணத்தை அங்கீகரித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கிய தீர்ப்புக்கு வரவேற்பு தெரிவிக்கிறோம். மேலும், இருபாலுடல் (இன்டர்செக்ஸ் - Intersex) குழந்தைகள் மீதான கட்டாய மருத்துவ குறுக்கீடுகளுக்கு / திருத்தங்களுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் எங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம். |
| 11) We demand that the government grant adult persons irrespective of sex, gender, caste, religion, ethnicity and language the right to cohabit, inherit property and adopt children. | 11) வயதுக்கு வந்த இரு நபர்கள் பால், பாலின, சாதி, மதம், இனம், மொழி, கடந்து இணைந்துவாழ, சொத்துரிமை, குழந்தைதத்தெடுக்க உரிமை ஆகிய உரிமைகளை அரசு அளித்திட நாங்கள் கோருகின்றோம். |
| 12) We mourn the loss of an unprecedented number of community members over the past year to both suicides and murders. We ask that families accept their LGBTIQA+ children unconditionally, not force us into heterosexual marriages against our wishes, separate us from our lovers and partners, or attempt to change our sexual orientation or gender identity through "conversion therapy" which is both unethical and unscientific. | 12) தற்கொலை மற்றும் கொலை போன்ற அசம்பாவிதங்களால் உயிரிழந்த எண்ணிலடங்கா LGBTIQ+ சமூகமக்களுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். இதுபோன்ற குழந்தைகளை கொண்ட குடும்பத்தினர்கள் தங்களது குழந்தைகளை எவ்வித நிபந்தனையும் இன்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அவர்களது விருப்பத்திற்கு மாறாக எதிர் பாலினத்தவருடனான திருமணத்திற்கு கட்டாயப்படுத்தக் கூடாது என்றும், காதலர்கள் மற்றும் துணைவர்களிடமிருந்து பிரிக்கக் கூடாது என்றும் ,நெறிமுறையற்ற அறிவியலுக்கு புறம்பானதுமான நிலைமாற்று சிகிச்சை ("conversion therapy") என்னும் தேவையற்ற சிகிச்சை மூலம் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தை மாற்ற முயற்சிக்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறோம். |
| 13) We stand in solidarity with all those resisting oppression by majoritarian forces, and oppose human rights violations based on caste, class, language, diet, disability, religion, | 13) சாதி, வர்க்கம், மொழி, உணவு, இயலாமை, மதம்,இனம், நிறம்,பாலினம், ஆகியவற்றிற்க்கும் குழந்தைகளுக்கு எதிரானவன்முறைஆகியவற்றை மனிதாபிமான |

| | |
|---|---|
| race, gender, besides other factors, and violence against children. We also oppose laws that are against sections of the population, and oppressive structures that are against minorities. | முறையின் எதிர்ப்பவர்களை ஒடுக்கி மனித உரிமை மீறலில் ஈடுபடும் நபர்களை எதிர்க்கும் அனைவரோடும் நாங்கள் ஒன்றிணைந்து ஆதிக்க சக்திகளை எதிர்க்க குரல் கொடுக்கின்றோம்.மக்களுக்கு விரோதசட்டங்கள், சிறுபான்மையினருக்கான எதிரான ஒடுக்குமுறைகள் ஆகியவற்றை நாங்கள் எதிர்கின்றோம். |
| USEFUL LINKS • On Facebook, check out https://www.facebook.com/chennaipride/ • Frequently Asked Questions about Chennai Pride March http://chennaipride.net/faq<br><br>For further details, please contact:<br><br>Jaya: 9841865423<br>Srijith Sundaram: 9884456460<br>Shiva: 9840699776<br>Sharan: 7904124919 | முகநூல்: https://www.facebook.com/chennaipride/<br>சென்னை வானவில்-சுயமரியாதை பேரணிகுறித்தஅதிகம் கேட்கப்படும் கேள்விகளின் தொகுப்பு : http://chennaipride.net/faq<br><br>மேலும் விவரங்களுக்கு, பின்வரும் தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளவும்:<br><br>ஜெயா: 9841865423<br>ஸ்ரீஜித் சுந்தரம்: 9884456460<br>சிவா: 9840699776<br>சரண்: 7904124919 |